**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.324 நாள்: 24.07.2026

**இராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (24.07.2026) வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-62க்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை, சிங்கண்ணன் தெருவில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், ஆதிகேசவலு தெருவில் கட்டப்பட்டு வரும் சென்னை நடுநிலைப் பள்ளி, வார்டு-58க்குட்பட்ட சிட்ஹாம்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் படைப்பகம், கண்ணப்பர் திடல் விளையாட்டு மைதானம், குத்துச் சண்டை அரங்கம் மற்றும் கழிவறைகள், அப்பகுதியில் உள்ள நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம், பெரியமேடு பகுதியில் உள்ள மைலேடிஸ் பூங்கா, நீச்சல் குளம், வார்டு-59க்குட்பட்ட ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகம், வார்டு-60க்குட்பட்ட காமராஜர் சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னம் அருகில் அமைக்கப்பட்டு வரும் போக்குவரத்து தீவுத்திட்டு மற்றும் அங்குள்ள செயற்கை நீரூற்று உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளையும், அமைக்கப்பட்டு வரும் போக்குவரத்து தீவுத்திட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவும், நீச்சல் குளம் மற்றும் அம்மா உணவகத்தினைத் தூய்மையாக பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**